434

48

ஸ்ரீமதே ராமாநுஜாய நம.

லகு - திருவாராதன—க்ரமம்.

... THE REGISTRAR OF BOOKS

இலவசமாகக் கிடைக்குமிடம்:

பிரசுரகர்த்தர்,

ஆ.சே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

...ாமிநாயக்கன் தெரு,

...பேட்டை, சென்னை-2.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

லகு - திருவாராதன—க்ரமம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

இலவசமாகக் கிடைக்குமிடம்:

பிரசுரகர்த்தர்:

ஆ. சே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
142. சாமிநாயக்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

இதை அடியேனுடைய பிதா ஸ்ரீ உபயவே. ஸ்ரீமான் ஆ. சேஷாச்சாரிய ஸ்வாமிகளின் திருவுள்ள உகப்புக்காக - அநேக பரம பாகவதர்கள் அநுஷ்டித்து உஜ்ஜீவிக்க வெளியிடலானேன்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம.

லகு - திருவாராதன—க்ரமம்.

பூர்வ படிகை

ஒவ்வொரு க்ரஹஸ்தர்களும் மாத்யான்னிகம் செய்த பிறகே பகவதாராதனம் செய்யவேண்டும். தமது க்ரஹத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாள் ஸன்னதியின் அருகில் சென்று, ந்யாஸதசகம் உச்சரித்துக்கொண்டே எம்பெருமானை ஸேவிக்கவும். பிறகு கண்டை (மணியை) ஸேவித்து, மூன்று தடவை இரு கைகளையும் தட்டி:—

"கௌஸல்யாஸுப்ரஜாராம பூர்வா
ஸந்த்யா ப்ரவர்த்ததே|
உததிஷ்ட நரசார்தூல கர்த்தவ்யம்
தைவமான்னிகம்||"

என்னும் ஸ்ரீமத் ராமாயண ச்லோகத்தைச்

தமிழ்நாடு ஆவணக் காப்பக

சொல்லிக்கொண்டு பெருமாள் பெட்டியைத் திறக்கவேண்டியது. பெருமாள் பெட்டியைத் தமது க்ரஹத்தில் கிழக்கு முகமாய் அல்லது வடக்கு முகமாய் எள்ளப்பண்ணவும். பிறகு தமது குருபரம்பரை தனியன்களை ஸேவிக்கவும். அதாவது:—ஓம்அஸ்மத்–குருப்யோ நம:, அஸ்மத்-பரமகுருப்யோ நம:, அஸ்மத்-ஸர்வ குருப்யோ நம:, ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:,

" அஸ்மத்தேசிக மஸ்மதீய பரமாசார்யா
நசேஷாந் குரூந்
ஸ்ரீ மங் லக்ஷ்மண யோகி புங்கவ மஹா
பூர்ணௌ முநிம் யாமுநம்||
ராமம் பத்மவிலோசநம் முனிவரம் நாதம்
சடத் வேஷிணம்
ஸேநேசம் ச்ரியமிந்திரஸஹசரம் நாராயணம்
ஸம்ச்ரயே||"

தமது ஆசார்ய—ப்ராசார்யர்களின் தனியன்களை அநுசந்தித்து, அஷ்டாக்ஷர மந்திரத்தினால் பத்து தடவை ப்ராணாயாமம் செய்து—ஸ்ரீபகவதாக்ஞயா ஸ்ரீமந் நாராயண ப்ரீத்யர்த்தம் இஜ்யாங்கம் தச-ஸங்கியாகம் அஷ்டாக்ஷர மஹா மந்திரஜபம் கரிஷ்யே என்று ஸங்கல்பித்துக்கொண்டு ஜபம் செய்து முடித்து ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் பக

வானே தமது ஸாளக்ராம மூர்த்தியில் ஆவிர்ப் பவித்திருப்பதாய் தியானம் செய்துக்கொண்டு,

"கூர்மாதீந் திவ்யலோகம் ததநு மணிமயம்
மண்டபம் தத்ர சேஷம்
தஸ்மிந் தர்மாதிபீடம் தது பரி கமலம்
சாமரக்ராஹிணீ ச|
விஷ்ணும் தேவீவிபூஷாயுத கணமுரகம்
பாதுகே வைநதேயம்
ஸேநேசம் த்வாரபாலாந் குமுதமுககணான்
விஷ்ணுபக்தாந் ப்ரபத்யே ||"

என்று சொல்லி பெருமாளின் எதிரில் (தனது வலது பக்கத்தில்) ஆராதன - பாத்ரங்களை படத்தில் காட்டியபடி

பாத்திர - அமைப்பு	
அர்க்கியம் முதலிய காரியத்துக்கு உத்தரிணியுடன் சேர்ந்த ஸர்வார்த்த தோய பாத்திரம்.	பெருமாளுக்கு காண்பித்த பிறகு, அந்த தீர்த்தத்தை சேர்க்கக்கூடிய வட்டில்.
கண்டை என்னும் திரு - மணி	திருமஞ்ஜன தட்டு

வைத்துக்கொண்டு, அவைகளில் ஸர்வார்த்த-தோய-பாத்திரத்தில் ஏலக்காய், குங்குமப்பூ, பச்சை கற்பூரம் முதலானவைகளை சேர்த்து அந்த பாத்திரத்தை வலக்கையினால் மூடிக் கொண்டு ஏழுதடவை அஷ்டாக்ஷர மந்திரத் தினால் ஜபித்து சுரபி முத்திரைக் காண்பித்து [சுரபி முத்திரையென்றால் இரு கைகளின் நடு விரல்களையும் மூடிக்கொண்டு மற்ற நான்கு விரல்களையும் சேர்த்து காண்பிப்பதாகும்] பிறகு ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து பெரு மாளின் எதிரில் மூக்குக்கு ஸமமாகத் தூக்கிக் காண்பித்து பகவத் பாதாரவிந்தத்திலிருந்து பெருகும் கங்காதீர்த்தமென்று தியானித்து (ஆராதனம் செய்கிறவராகிய தன்னையும்) ஆராதனை இடத்தையும்ப்ரோக்ஷித்து பரிசுத்த மானதாக நினைத்துக்கொள்ள வேண்டியது. பிறகு,

திருவாராதன - ஆரம்பம்

முதலாவது மந்த்ராஸனம். "இதம் மந்த்ரா ஸனம் ஸமர்ப்பயாமி" என்று ஒரு புஷ்பம் அல்லது துளஸியை பெருமாளின் பெட்டியில் சேர்க்கவும். பிறகு மணியை ஸேவித்துக் கொண்டு உத்தரிணியில் ஒருதடவை தீர்த்தம் எடுத்துக்கொண்டு பெருமாளுக்கு காண்பித்து

இதம் அர்க்கியம் ஸமர்ப்பயாமி என்று சொல்லி அந்த தீர்த்தத்தை மற்றொரு வட்டிலில் சேர்த்து விடவும். இம்மாதிரியே இரண்டு தடவை உத்தரிணி தீர்த்தத்தைக் காண்பித்து இதம் பாத்தியம் ஸமர்ப்பயாமி என்றும், பிறகு மூன்று தடவை உத்தரிணி தீர்த்தத்தைக் காண்பித்து இதம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி என்று சொல்லி மந்த்ராஸனத்தை முடிக்கவும். [இம் மாதிரியே ஆராதன காலத்தில் குறிப்பிட்ட இடங்களில் அர்க்கிய-பாத்ய-ஆசமனீயங்களை நடத்தவும்.]

திருமஞ்சனம்

இரண்டாவது ஸ்நானாஸனம். "இதம் ஸ்நானாஸனம் ஸமர்ப்பயாமி," என்று ஒரு துளசியை எடுத்து ஒரு தட்டில் சேர்த்து பெருமாளை திருமஞ்சன பாத்திரத்தில் எள்ளப் பண்ணி மணியை ஸேவித்துக்கொண்டே ஹரி: ஓம்—ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:, ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத், ஸபூமிம்விச்வதோவ்ருத்வா, அத்யதிஷ்டத்தசாங்குலம், புருஷ ஏவேதகும் ஸர்வம், யத்பூதம் யச்சபவ்யம், உதாம்ருதத்வஸ்யே ஸான:, யதன்னேநாதிரோகதி, ஏதாவாநஸ்ய மஹிமா, அதோஜ்யா கும்ஸ்சபுருஷ:, பாதோஸ்யவிச்வாபூதானி-ஹரி ஓம்—என்று புருஷ

ஸூக்தம் சொல்லிக்கொண்டே பெருமாளுக்கு திருமஞ்சனம் செய்யவும். பிறகு அர்க்ய, பாத்ய, ஆசமனீயம் ஸமர்ப்பித்து பெருமாளை உலர்ந்த சுத்த வஸ்திரத்தினல் துடைத்து பெட்டியில் எள்ளப்பண்ணவும்.

அலங்காராஸநம்.

மூன்ருவது அலங்காராஸநம். "இதம் அலங்காராஸநம் ஸமர்ப்பயாமி" என்று சொல்லி பெருமாள் திருமேனியில் சந்தனம், புஷ்பம் ஸமர்ப்பித்தும், பிறகு அர்க்கியம், பாத்யம், ஆசமனீயம் ஸமர்ப்பித்தும், கண்டாராதனத்துடன் ,'தூபம் ஸமர்ப்பயாமி" என்று சொல்லி ஸாம்பிராணி தூபத்தையும், பிறகு "தீபம் ஸமர்ப்பயாமி என்று" சொல்லி ஒரு பஞ்சு திரியை நெய்யில் நனைத்து ஏற்றி மணி ஸேவித்துக்கொண்டே பெருமாளுக்கு எதிரில் காண்பிக்கவும். அல்லது கற்பூர ஹார்த்தி செய்யவும்.

மந்த்ர புஷ்பம்.

துளசி புஷ்பம் முதலியவைகளை ஒரு தட்டில் வைத்து அதை கையில் எடுத்துக்கொண்டு— ஹரி: ஓம். ஹரி; ஓம் என்று இரண்டு தடவை உச்சரித்து அக்னிமீளே புரோஹிதம், யக்யஸ்ய

தேவம்ருத்விஜம், ஹோதாரம் ரத்னதாதமம், இஷேத்தோர் ஜேத்வா வாயபஸ்தோ பாயவஸ் தவ: தேவோவஸ்ஸவிதா ப்பிரார்ப்பயது சிரேஷ்டதமாய கர்மணே ஹரி: ஓம், ஹரி:ஓம்: (1) ஹரி: ஓம், ஹரி: ஓம் அக்ன ஆயா ஹவீதயே, க்ருணோனோ ஹவ் யதாதயே, நிஹோதாத் ஸஸ்ய பர்ஹிஷி, ஹரி: ஓம், ஹரி: ஓம், சந்நோதேவீர பிஷ்டயே, ஆபோபவந்து பீதயே. சம்யோர பிஷ்டவந்துந: ஹரி: ஓம், ஹரி: ஓம்—(2) இது முதலான வேதருக்குகளை அநுஸந்தித்து பிறகு

தபஸ் வாத்யாயநிரதம் தபஸ்வீவாக்விதாம் வரம் |
நாரதம் பரிபப்ருச்ச வால்மீகிர்முநிபுங்கவம் ||
(ராமாயண ச்லோகம்)

தாஸாமாவிரபூச் சௌரி: ஸ்மயமானமுகாம் புஜ: |
பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷாந் மன்மதமன் ||
மத: || (பாகவத் ச்லோகம்)

வைகுண்டேது பரலோகே ச்ரியாஸார்த்தம் ஜகத்பதி: |
ஆஸ்தே விஷ்ணுரசிந்தியாத்மா பக்தைர்பாக வதைஸ்ஸஹ ||

(இது முதலானவை அநுஸந்திக்கவும்.)

பிறகு

அர்ச்சனை.

ஓம் ஸ்ரீகேசவாய நம:ஓம்
,, நாராயணாய நம: ,,
,, மாதவாய நம: ,,
,, கோவிந்தாய நம: ,,
,, விஷ்ணவே நம: ,,
,, மதுஸூதநாய நம: ,,
,, த்ரிவிக்ரமாய நம: ,,
,, வாமனாய நம: ,,
,, ச்ரீதராய நம: ,,
,, ஹ்ருஷீகேசாய நம: ,,
,, பத்மநாபாய நம: ,,
,, தாமோதராய நம: ,,

ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம; ஓம் என்று சொல்லிக்கொண்டே பெருமாளை அர்ச்சிக்கவும். பிறகு தீபார்த்தியை கண்டாராதனத்துடன் ஸமர்ப்பிக்கவும்.

தளிகை ஸமர்ப்பித்தல்

நான்காவது போஜ்யாஸனம். பெருமாளுக்கு எதிரில் ப்ரஸாதம் வ்யஞ்ஜனம், பக்ஷணம் முதலியவைகளை எடுத்து வைக்கச்செய்து அதை ஒரு உத்தரிணி தீர்த்தத்தினால் முதலில் ப்ரோக்ஷித்து "இதம் போஜ்யாஸனம் ஸமர்ப்பயாமி"

என்று ஒரு துளஸியை பெருமாள் திருமேனியில் ஸமர்ப்பித்து முதலில் மானஸிகமாய் அமுது செய்தருளப் பண்ணவும். (அதாவது மானஸி காராதானம்— த்யானம்.)

"ஸௌவர்ணே ஸ்தாலிவர்யே மணிகணகசிதே
கோக்ருதாத்தான் ஸுபக்வான்
பக்ஷ்யான் போஜ்யாம் சலேஹ்யாந் பரமமத
ஹவிஸ ஸோஷ்யமந்நம் நிதாய
நாநாசாகைருபேதம் ததிக்ருத ஸஹிதம்
க்ஷீரபாநீய யுக்தம்
தாம்பூலம் சாத்மனேஸ்மை ப்ரதிதிவஸமஹம்
மானஸம் கல்பயாமி||"

என்று தியானித்துப் பிறகு மணியை ஸேவித்துக் கொண்டே அஷ்டாக்ஷரத்தினால் தளிகை ஸமர்ப்பிக்கவும். பிறகு அர்க்கியம் பாத்யம் ஆசமனீயமும் ஸமர்ப்பிக்கவும்.

புனர் மந்த்ராஸனம்.

ஐந்தாவது புனர்மந்திராஸநம். பிறகு "இதம் புனர்மந்திராஸநம் ஸமர்ப்பயாமி" என்று ஒரு துளஸி அல்லது புஷ்பத்தைப் பெருமாளுக்கு ஸமாபபித்து பழம், வெற்றிலைப் பாக்கு முதலி

யவைகளை ஸமர்ப்பிக்கவேண்டும். பிறகு அர்க்கிய பாத்ய, ஆசமனீயங்களை ஸமர்ப்பிக்கவும்.

சாத்துமுறை.

முதலில் மணி அடித்துக்கொண்டு கர்ப்பூர ஹாரத்தி செய்யும்பொழுது ஓம் தத்விஷ்ணோ: பரமம்பதம் ஸதாபச்யந்தி ஸூரய: திவீவசக்ஷுராததம், தத்விப்ராஸோவிபந்யவோ ஜாக்ருவாம்ஸஸ்ஸமிந்ததே விஷ்ணோர்யத்பரமம்பதம்: ஓம் என்று மங்களாரத்தியை (கர்ப்பூரத்தை) கீழே சேர்த்துவிட்டு திவ்யப்ரபந்த சாத்துமுறை செய்யவேண்டும். அதாவது,

[சாத்துமுறை பாட்டு]

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்து-உன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து-நீ
குற்றேவலெங்களைக் கொள்ளாமல்போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும்- உன்றன்னோடு
உற்றோமே யாவோமுனக்கே நாமாட் செய்வோம்
மற்றை நம்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச்சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப்பரிசுரைப்பா ரீரிரண்டு மால்வரைத் தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு—
பலகோடி நூறுயிரம் மல்லாண்ட திண்டோள்
மணிவண்ணா உன் சேவடி செவ்வித் திருக்காப்பு.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம்
பல்லாண்டு

வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு

வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும்
பல்லாண்டு

படைபோர்ப் புக்குமுழங்கும் அப்பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே.

பிறகு

ஆராதவருளமுதம் பொதிந்த கோயிலம்பு
யத்தோ
னயோத்திமன்னர்க் களித்தகோயில்

தோளாத தனிவீரன் தொழுதகோயில்
துணையான
வீடணற்குத் துணையாங்கோயில்
சேராத பயனெல்லாம் சேர்க்குங்கோயில்
செழுமறையின்
முதலெழுத்துச்சேர்ந்தகோயில்
தீராத வினையனைத்தும் தீர்க்குங்கோயில்
திருவரங்கமெனத் திகழும் கோயில்தானே.

[கண்ணடியிணை—வேங்கடவெற்பென விளங்கும் வேதவெற்பே. என்பதையும்]

[உத்தம வமர்த்தல— அணி அத்திகிரியே என்பதையும்]

இங்கு அநுஸந்திக்கலாம்.

பிறகு

ஸர்வதேச தசாகாலே ஷவவ்பாஹத பராக்ரமா|
ராமாநுஜார்யதிவ்யாக்ஞா வர்த்ததாமபிவர்த்
ததாம்||
ராமாநுஜார்ய திவ்யாக்ஞா ப்ரதிவாஸாமுஜ்வலா|
திகந்தவ்யாபிநீபூயாத் ஸாஹிலோக ஹிதைஷிணீ||

ஸ்ரீமத்! ஸ்ரீரங்க! ச்ரியமநுபத்ரவா மநுதினம்
ஸம்வர்த்தய|
ஸ்ரீமந்! ஸ்ரீரங்க! ச்ரியமநுபத்ரவா மநுதினம்
ஸம்வர்த்தய||

நமோராமாநுஜார்யாயவேதாந்தார்த்த
ப்ரதாயிநே|
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணசாலிநே||
ராமாநுஜதயாபாத்ரம்க்ஞான வைராக்யபூஷணம்|
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம்வந்தேவேதாந்ததேசிகம்||

தேசிகன் வாழித் திருநாமம்

வாழி யிராமாநுசப் பிள்ளான் மாதகவால்வாழும்-
அணிநிகமாந்தகுரு – வாழியவன்
மாறன் மறையு மிராமாநுசன் பாஷ்யமும்
தேறும்படி யுரைக்குஞ்சீர்.

வஞ்சப் பலசமயம் மாற்றவந்தோன் வாழியே
மன்னுபுகழ்பூதூரான்மனமுகப்போன்வாழியே;
கஞ்சத் திருமங்கை யுகக்கவந்தோன் வாழியே
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன்
வாழியே;
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்
போன் வாழியே
திருமலைமால் திருமணியாய் சிறக்கவந்தோன்
வாழியே;
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே
செந்தமிழ் தூப்புல் திருவேங்கடவன்வாழியவே.

நானிலமும் தான் வாழ நான்மறைகள் தான்வாழ
மானகரின் மாறன் மறைவாழ—ஞானியர்கள்
சென்னி யணிசேர் தூப்புல் வேதாந்ததேசிகனே!
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

வாழியணி தூப்புல் வருநிகமாந் தாசாரியன்
வாழியவன் பாதார விந்தமலர்—வாழியவன்
கோதிலாத் தாள்மலரைக் கொண்டாடிக் கொண்
டிருக்கும்
தீதிலார் நல்லோர்த் திறள்.

என்று இந்த வாழித் திருநாமங்களை தமது பந்து
மித்திரர்களுடன் அநுஸந்திக்கலாம்.

பர்யங்காஸனம்

ஆறுவது பர்யங்காஸனம். பிறகு பெருமாளுக்கு "இதம் பர்யங்காஸனம் ஸமர்ப்யாமி" என்று ஒருதுளசியை ஸமர்ப்பித்து பாத்யம்ஆசமனீயம் ஸமர்ப்பித்து பெருமாள் திருமேனியில் ஆராதகர் ஸமர்ப்பித்த புஷ்பம் சந்தனம் துளசிமாலை இவைகளை தமக்கு ப்ரஸாதமாக வெளியில் எடுத்துக்கொண்டுவிட்டு, பெருமாள் பெட்டியை வழக்கம்போல் மூடிவிட்டு யோகநித்ராம் குருஷ்வ என்று உச்சரித்து பிறகு தெண்டம் ஸமர்ப்பித்து "ஸர்வாபராதான் க்ஷமஸ்வ" என்று அபராத க்ஷாபணமும் செய்துகொண்டு கண்டை ஸேவித்து திருவாராதனத்தை பூர்த்தி செய்யவும். பிறகு முதலில்ஆராதனம்செய்பவர் பெருமாள் தீர்த்தம் எடுத்துக்கொண்டு. பிறகு மற்றவர்களுக்கும் தீர்த்தம்–துளசி-சந்தனம் விநியோகிக்கவேண்டும். பிறகு ஆசமனம் செய்து ஸாத்வீக தியாகம் செய்யவும் (அதாவது ஸ்வஸ்மைவப்ரீதயே ஸ்வயமேஸவகாரிதவான்– என்னைக்கொண்டு பகவானே தனது ப்ரீதிக்காக இந்த ஆராதன காரியத்தை முடித்துக்கொண்டான் என்று நினைத்துக்கொள்ளவும்)

பிறகு

நின்னருளாங் கதியின்றி மற்றொன்றில்லேன்
நெடுங்காலம் பிழைசெய்த நிலைகழிந்தேன்

உன்னருளுக் கினிதான நிலையுகந்தேன்
உன்சரணே சரணென்னும் துணிவுபூண்டேன்
மன்னிருளாய் நின்ற நிலை யெனக்குத்தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தேனுன்னை
இன்னருளா லினியெமக்கோர் பரமேற்றுமல்
என்திருமா லடைக்கலங்கொள் என்னை நீயே.

என்று நைச்யமாய் அநுஸந்தித்து விட்டு பிறகு நித்ய ததியாராதன ஆத்ம ஸமாரோபணங்களை நடத்தவேண்டும்.

ஓம் தத்ஸத்

[இந்த திருவாராதனக்ரமத்தில் "மணிஸேவித்துக் கொண்டு" என்பதை ஸ்ரீ வேதாந்த தேசிக-ஸம்ப்ரதாயஸ்தர்கள் மாத்திரம் அனுஷ்டிக்கவும் தென் கலை ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸம்ப்ரதாயஸ்தர்கள் அந்த இடங்களில் திருமணி ஸேவிக்காமலும், ஸ்ரீ தேசிகருடைய வாழித்திருநாம ஸ்தானத்தில் தமது முக்யாசார்யரான ஸ்ரீமணவாள மஹா முனிகளின் வாழித் திருநாமத்தையும் ஸேவித்து மற்றவைகளை க்ரமப்படி அநுஷ்டிக்கலாம். இது இக்காலத்திய ஸம்ப்ரதாயத்துக்கு அநுகூலமாகவே அமைக்கப்பட்டுள்ளது]

T. A. PRESS MADRAS-2.